**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு. மா. சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் தைத் திங்கள் 28–ம் நாள்
2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11–ம் நாள் புதன்கிழமை
******

**அசல் வழக்கு எண். 123/2016ல் இடைமனு எண்.01/2025**

இன்பசேகரன் .....மனுதாரர்/வாதி

...எதிர்...

1. திருஞானசம்பந்தம் (இறந்தார்)
மற்றும் பலர் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 05.02.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

பிராதை திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை–6 விதி 17 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்.**

(1.1) மனுதாரர், அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.11 18:59:29 +0530

உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கின் 2ம் பிரதிவாதி கலாவதி இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது இறந்து விட்டதாகவும், 2ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களே 3 முதல் 6 பிரதிவாதிகள் என்றும், இந்த வழக்கில் இறந்த 2ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களான 3 முதல் 6 பிரதிவாதிகள் ஏற்கனவே ஒரு தரப்பினராக உள்ளார்கள் என்றும், எனவே இறந்த 2ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை சேர்க்க தனியாக வாரிசு மனு தேவையில்லை என்றும், 6ம் பிரதிவாதியின் முகவர் தான் இறந்த 2ம் பிரதிவாதி என்றும்,

(1.2) தாவா பி அட்டவணை சொத்தில் 1ம் பிரதிவாதி 03.01.2016ல் சுவர் கட்டிவிட்டதாகவும், எனவே மேற்படி சுவற்றை இடிக்க செயல் உறுத்து கட்டளை பரிகாரம் வேண்டியும், மேற்படி சுவற்றின் உயரத்தை உயர்த்த கூடாது என்றும், இணைக்க கூடாது என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் மனுதாரர்/வாதி 1ம் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்து இருந்ததாகவும், 1ம் பிரதிவாதி இறந்து விட்டதால் 2 முதல் 6 பிரதிவாதிகளை இந்த வழக்கில் சேர்த்துள்ளதாகவும்,

(1.3) தாவா பி அட்டவணை சொத்தில் 1ம் பிரதிவாதி கட்டிய சுவற்றை அகற்ற 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக செயல் உறுத்து கட்டளை பரிகாரம் பிராதில் கோரப்பட்டிருப்பதாகவும், தற்பொழுது தாவா பி அட்டவணை சொத்தை பொறுத்து வசப்பரிகாரமும் மேற்படி வழக்கில் கோர வேண்டும் என சட்ட ஆலோசனை தற்போது கிடைத்திருப்பதால் அதனால் வசப்பரிகாரம் கோரி பிராதை திருத்தம் செய்ய வேண்யுள்ளதாகவும், மேலும் வழக்கு சொத்திற்கான சர்வே நம்பர் உட்பிரிவு ஏற்பட்டுள்ளதன் காரணமாகவும் பிராதினை திருத்தம் செய்வது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளதாகவும் கீழ்க்காணும் திருத்தங்களைக் குறிப்பிட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>திருத்தம் செய்ய வேண்டிய விபரம்:</u>**



CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.11 18:59:34 +0530

1. பிராது குறுந்தலைப்பு, பொறுமான விபரத்தாள், ஆவணவிபரத்தாள், டாக்கெட் ஷீட் ஆகியவற்றில் கலாவதி பெயருக்கு அடுத்து இறந்தார் என்று சேர்க்கவும்.

2. பிராது நெடுந்தலைப்பில் 2ம் பிரதிவாதி கலாவதி பெயருக்கு அடுத்து இறந்தார் என்று சேர்க்கவும்.

3. பிராது பாரா (9A)-க்கு அடுத்து (9B) 2ம் பிரதிவாதி கலாவதி என்பவர் இறந்து விட்டார். 2ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களான 3 முதல் 6 பிரதிவாதிகள் ஏற்கனவே இந்த வழக்கின் தரப்பினர்களாக உள்ளார்கள்.

4. பிராது பாரா 14ல் 1ல் உள்ள 4வது வரியில் உள்ள 2க்கு பதில் 3 என்று சேர்க்கவும். அதைபோல் பிராது பாரா 14ல் 2ல் உள்ள 2,3வது வரியில் உள்ள 2க்கு பதில் 3 என்று சேர்க்கவும்.

5. பிராது பாரா 15ல் 1ல் உள்ள 4,6வது வரியில் உள்ள 2க்கு பதில் 3 என்று சேர்க்கவும். அதைபோல் பிராது பாரா 15ல் 2ல் உள்ள 2,4வது வரியில் உள்ள 2க்கு பதில் 3 என்று சேர்க்கவும்.

6. பிராது பாரா 14ல் பொறுமான காலத்தில் 1வது காலத்திற்கு பிறகு (1A) தாவா பி அட்டவணை சொத்தில் 1ம் பிரதிவாதி ஆக்கிரமித்து கட்டியுள்ள சுவற்றை 3 தல் 6 பிரதிவாதிகள் அகற்றி விட்டு தாவா பி அட்டவணை சொத்தை காலி இடமாக வாதியிடம் 3 முதல் 6 பிரதிவாதிகள் வசம் ஒப்படைக்கவேண்டும் என சுவாதின மீட்பு பரிகாரத்திற்கு நீதிமன்ற கட்டணப்பிரிவு 30ன்படி

வழிகாட்டி மதிப்பு 1 சதுரடி ரூ.901/ என்று

இருக்கும்போதிலும் மார்க்கெட் மதிப்பு

1 சதுரடி ரூ.1,400 வீதம்

73 சதுரடிக்கு 1,02,200-00 3,066-00

என்றும் கூடுதல் காலத்தில் உள்ள 2,000-00என்பதற்கு பதில் 1,04,200-00என்றும் 151-00 என்பதற்கு பதில் 3,217-00 என்றும் சேர்க்கவும்.



CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.11 18:59:39 +0530

பிராது பாரா 14ல் 2வது வரியில் உள்ள 2,000/- என்பதற்கு பதில் 1,04,200-00 என்றும் 3வது வரியில் உள்ள 151-00 என்பதற்கு பதில் 3,217-00 என்றும் 27 (C )க்கு முன்பு 30 என்றும் சேர்க்கவும்.

7. பிராது பொறுமான விபரத்தாளில் உள்ள 2,000-00என்பதற்கு பதில் 1,04,200-00 என்றும் 151-00 என்பதற்கு பதில் 3,217-00 என்றும் 27 (C)-க்கு முன்பு 30 என்றும் சேர்க்கவும்.

8. பிராது பாரா 15ல் 1வது பாராவிற்கு அடுத்து (IA) தாவா பி அட்டவணை சொத்தில் 1ம் பிரதிவாதி ஆக்கிரமித்து கட்டியுள்ள சுவற்றை 3 முதல் 6 பிரதிவாதிகள் அகற்றி விட்டு தாவா பி அட்டவணை சொத்தை காலி இடமாக வாதியிடம் 3 முதல் 6 பிரதிவாதிகள் வசம் ஒப்படைக்கவேண்டும் என சுவாதின மீட்பு பரிகாரம் வழங்கவும் என்று சேர்க்கவும்.

மனுவில் விவரிக்கப்பட்டுள்ளபடி பிராதை திருத்தம் செய்து கொள்ள அனுமதி அளித்து உத்திரவிடக் கோரி மனுதாரர்/வாதியால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 6ம் எதிர்மனுதாரர்/6ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 5 பிரதிவாதிகளால் தழுவிக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்.**

**(i)** இந்த 6ம் பிரதிவாதியை பொருத்து இந்த இடைமனுவில் உள்ள நெடுந்தலைப்பில் இவருக்காக இவரது தாயார் கலாவதியை எவ்வாறு நெடுந்தலைப்பில் காட்டப்பட்டார் என்பதையும் மேற்படி கலாவதி இறந்து விட்டதால் அவரை இந்த 6ம் பிரதிவாதிக்காக நெடுந்தலைப்பில் காட்டியது தவறான நடைமுறையாகும் என்றும், இந்த இடைமனுவின் திருத்த விபரம் 6ல் பொருமானம் காலத்தில் வழிகாட்டு மதிப்பு படி 1 சதுரடி ரூ.901 என்று கூறிவிட்டு, மார்கெட் மதிப்பு 1 சதுரடி ரூ.1400 வீதம் ரூ.1,02,000 என மதிப்பிட்டது தவறான நடைமுறையாகும் என்றும்,



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.11 18:59:45 +0530

(II) ஏனெனில் வழிகாட்டு மதிப்பின் அடிப்படையிலேயே பொருமான விபரம் நிர்ணயிக்கப்படுவதாகவும், அதனடிப்படையில் ரூ.65,773 என மதிப்பிட்டிருக்க வேண்டும் என்றும், மேலும் மார்கெட் மதிப்பு 1 சதுரடி ரூ.1400 என்று எதனடிப்படையில் மதிப்பிட்டார் என்பதை இம்மனுவில் மனுதாரர் / வாதி குறிப்பிட்டு கூறவில்லை என்றும், இந்த இடைமனுவின் திருத்தம் 6ல் 73 சதுரடி என்பதை எவ்வாறு கணக்கிட்டார் என்பதை இந்த இடைமனுவில் மனுதாரர் / வாதி குறிப்பிட்டு கூறவில்லை என்றும்,

(III) இந்த வழக்கில் நல்லதோர் கட்சி வாதிக்கு இல்லை என்பதால் இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்திற்காகவே இந்த இடைமனுவானது இவ்வழக்கு மாண்பமை நீதிமன்றத்தில் Listல் போட்ட பிறகு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த 6எதிர்மனுதாரர்/6ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

3. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

<u>5. தீர்வு:</u>

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் கட்சியாடி, விசாரணைக்கு வந்து மனுதாரர்/வாதி தரப்பில் விசாரணை தொடங்குவதற்காக கெடு போடப்பட்டுள்ள நிலையில்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.11 18:59:52 +0530

பிராதில் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரியும், சில திருத்தம் செய்து மேல்நடத்த வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது என்று கூறியும், சில திருத்தங்கள் குறிப்பிட்டு மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) 6ம் எதிர்மனுதாரர்/6ம் பிரதிவாதி தரப்பில், வழக்கின் பொருமான விபரம் தவறு என்றும், திருத்தம் 6ல் 73 சதுரடி என்பது எந்த நீள, அகலத்தை கொண்டு கணக்கிடப்பட்டது என்று கூறவில்லை என்றும், வழிகாட்டு மதிப்பின் அடிப்படையிலேயே பொருமான விபரம் நிர்ணயிக்கப்படுவதாகவும், அதனடிப்படையில் ரூ.65,773 என மதிப்பிட்டிருக்க வேண்டும் என்றும், மேலும் மார்கெட் மதிப்பு 1 சதுரடி ரூ.1400 என்று எதனடிப்படையில் மதிப்பிட்டார் என்றும், வழக்கு Listல் போட்டபிறகு காலதாமதப்படுத்துவதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

(iii) மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கு சொத்து 1 சதுரடி ரூ.1400/− என்பதற்கு ஆதாரமாக 3ம் நபர் பிரமாண பத்திரம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர்/வாதி குறிப்பிடும் பொருமானத்தையே ஏற்றுக்கொள்ளலாம் என்பதாலும், 73 சதுரடி எவ்வாறு கணக்கிடப்பட்டது என்பதை வழக்கு விசாரணைக்கு பிறகுதான் தெரியவரும் என்பதாலும், மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், மனுவில் குறிப்பிட்டுள்ள திருத்தங்கள் ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. இதனால் வழக்கின் விசாரணை எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. எனவே எதிர்மனுதாரர்களுக்கு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பிருப்பதாலும், மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.11 18:59:57 +0530

இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதி, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.11 19:00:03 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் | – இல்லை – |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.11 19:00:09 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>நேரிய/வரைவு உத்தரவு</u>**
அசல் வழக்கு எண்.123/2016ல்
**இடைமனு எண்.01/2025**
நாள்.11.02.2026.